**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. C.C. No. 250/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-2, L.W-2 |
| Name | : Krithika | Defence | : |
| Husband Name | : Srinivasan | Court | : |
| Village | :Annanperumalkoil | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | :52/2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.06.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் அண்ணன்பெருமாள் கோயில் , கிளார்திடல் தெருவில் வசித்து வருகிறேன். அ.சா. 1 எனது கணவர் . அவர் வட்டார கல்வி அலுவலராக பணிப்புரிகிறார்.எதிரி பிராபகரனை தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 24.06.2021 -ம்தேதி இரவு சுமார் 7 மணிக்கு நானும் எனது கணவரும் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தபோது எதிரியின் வீட்டில் மின்சாரம் தடையாக இருந்தது. அதற்கு எங்கள் பாக்குமரம்தான் காரணம் என்று வீனாக கருதி எங்கள் வீட்டின் இடதுப்புறம் உள்ள பாக்குமரத்தை வெட்டிவிட்டார். அதை ஏன் என்று என் கணவர் கேட்டதற்கு எதிரி அரிவாளால் என் கணவரின் கழுத்தில் வைத்து வெட்டி தள்ளிக்கொண்டே வந்தார். அதை தடுத்த என் கணவரின் இருகைகளில் உள்ள பத்து விரல்களிலும் இரத்தக்காயம் ஏற்பட்டது. எதிரியிடம் ஏன் இவ்வாறு செய்தாய் என்று கேட்டதற்கு என் கணவரின் தலையை வெட்டி என்னிடம் கொடுத்துவிடுவேன் என்று கூறினார்.எதிரி என்னிடம் படித்த முன்னால் மாணவன் தான். எதிரி எப்போதும் என் வீட்டு காம்பவுண்ட் சுவர் ஏறி பிரச்சினை செய்வதையே வழக்கமாக கொண்டுள்ளார். மேற்படி சம்பவம் சம்பந்தமாக எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

போலிசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர் . எதிரியின் செயல்களால் எங்களுக்கு அச்சமாக உள்ளது என்று **சாட்சி இருக்கண்களிலும் கண்ணீர் வடிய சாட்சியம் அளித்தார்.**

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் இல்லை என்பதால் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.